

**சட்டப்பேரவையில்**

**மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு**

**நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**

**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

**ஆற்றிய உரை**

# மீண்டும் வளர்ச்சிப் பாதையில்
# தமிழ்நாடு

சட்டப்பேரவையில்
மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான
விவாதத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை.
10.06.2011

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

சிறப்பு வெளியீடு எண்.1

தமிழரசு இலவச வெளியீடு

ஜூன் 2011

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

சட்டப்பேரவையில்
மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான
விவாதத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை.
10.06.2011

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள், தங்களுக்கு எப்படிப்பட்ட ஆட்சி வேண்டும் என்பதை சிந்தித்து, அதற்கான செயல்வடிவம் கொடுக்கும் அரசமைப்பு தான் ஜனநாயகம் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால் அதற்குப் பின்னணியாக விளங்குவது மக்கள் தான். அதனால் தான், ''மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' என்றார் பேரறிஞர் அண்ணா.

இந்தத் தேர்தலில் தமிழகத்தில் மீண்டும் உண்மையான ''ஜனநாயகம்'' மலர தமிழக மக்கள் வழிவகை செய்துள்ளனர். மக்களின் உள்ளக் கிடக்கை இந்தத் தேர்தலில் பிரதிபலிக்கப்பட்டு உள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கும்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கிடைத்துள்ள இந்த வெற்றி ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி.

மக்கள் சக்தியை முடக்கி விடலாம் என்ற மமதையில் "தேர்தல் முடிந்து மே மாதத்திற்குப் பிறகு அதிமுக என்ற இயக்கம் இருக்காது" என்று பேட்டி அளித்தார் நாடாளுமன்றத்தில் பதில் அளிக்கவே அஞ்சும் ஓர் மத்திய அமைச்சர். இன்று அந்த அமைச்சர் இருக்கின்ற இடம் தெரியாத அளவுக்கு; நான் எதிர்க்கட்சித் தலைவராக இங்கே உரையாற்றிய நாட்களில் என்னை பேசவிடாமல் குறுக்கீடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த முன்னாள் மைனாரிட்டி தி.மு.க. அரசின் அமைச்சர்கள், இந்த அவையிலேயே நுழைய முடியாத அளவுக்கு மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். தி.மு.க.வின் "பண பலம்", "படை பலம்", "அதிகார பலம்" ஆகியவற்றை முற்றிலும் புறக்கணித்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு நான் பதில் அளிக்கும் வகையில் என் மீதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் நம்பிக்கை வைத்து, கழகத்தின் தலைமையிலான கூட்டணி வேட்பாளர்களை 203 தொகுதிகளில் வெற்றி பெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை 146 தொகுதிகளில் அமோக வெற்றி பெறச் செய்த என் அன்பிற்கினிய தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும், என்னை இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணியின் வெற்றிக்காக பாடுபட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், தோழமைக் கட்சியினருக்கும், ஆதரவு நல்கிய பல்வேறு அமைப்புகளுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, கழகத்தின் வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை கழக உடன்பிறப்புகளுக்கும் என் மனமார்ந்த நன்றியினை முதற்கண் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கவும்; தமிழ்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறவும்; விலைவாசியைக் கட்டுப்படுத்தவும்; தமிழ்நாட்டை மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றவும் அயராது பாடுபடுவேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு.பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு என் பதிலைத் தொடங்குகின்றேன்.

கடந்த ஐந்து ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மக்கள் பட்ட வேதனைகள் சொல்லி மாளாது. சட்டம்–ஒழுங்கு சீரழிவு, கடுமையான மின்வெட்டு, விண்ணை முட்டும் விலைவாசி, மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனை, ரேஷன் பொருட்கள் கடத்தல், வேலையில்லாத் திண்டாட்டம், போலி மற்றும் காலாவதியான மருந்து விநியோகம், நில அபகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளில் தமிழக மக்கள் சிக்கித் தவித்தனர். ஒரு குடும்பத்தின் பிடியில் தமிழ்நாடு சிக்கித் தவித்தது.

ஐந்து ஆண்டு கால கொடுங்கோல் குடும்ப ஆட்சி ஒழிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களாட்சி மலர்ந்தவுடன் சுதந்திரம் கிடைத்த உணர்வு தமிழக மக்களிடையே எழுந்துள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஏழு

வாக்குறுதிகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டன. இதுவரையில் இல்லாத அளவிற்கு, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கென்று ஒரு தனி அமைச்சகமும் அமைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவருமே சட்டம்–ஒழுங்கைப் பற்றி பேசினார்கள். அதைப்பற்றி சில கருத்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழக மக்கள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினை சட்டம்–ஒழுங்கு சீரழிவு. அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அமளிக் காடாக மாற்றியது தான் திரு. கருணாநிதியின் கடந்த ஐந்து ஆண்டு கால சாதனை. இதனை சீர்செய்யும் விதமாக சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டவும், நிருவாகத்தை செம்மையாக்கவும் ஆளுநர் உரையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை என்றும் ஸ்காட்லாண்டு யார்டு போன்ற உலகில் சிறந்து விளங்கும் காவல் துறைக்கு இணையானது என்றும் பெயர் பெற்று விளங்கியது. அத்தகைய காவல் துறை, கடந்த ஐந்து ஆண்டுகளில் தன்மானம் இழந்து, மனோதிடம் இழந்து, தான் பெற்ற புகழை எல்லாம் இழந்து பரிதாபகரமாக காட்சி அளித்ததை தமிழ்நாடே நன்கு அறியும்.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்கும் போதெல்லாம், காவலர்கள் தங்கள் பணிகளில் எத்தகைய குறுக்கீடும், இடையூறும் இல்லாமல் தங்கள் கடமையை செவ்வனே செய்வது வாடிக்கை. அப்போதெல்லாம் சமூக விரோதிகள் மீதும், தீவிரவாதிகள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக திகழும் என்பதும் அனைவரும் அறிந்ததே.

எனவே, சட்டம்-ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டி மக்கள் எவ்வித பயமும் இன்றி அமைதியாக தங்களது வாழ்க்கையை நடத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் ஏற்கெனவே எடுத்துள்ளேன்.

காவலர்கள் தங்கள் பணிகளை நியாயமாகவும், நேர்மையாகவும் செய்ய வேண்டும் எனில், அவர்களது பணியில் எந்தவித குறுக்கீடும் தலையீடும் இருக்கக் கூடாது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அப்படிப்பட்ட நிலைமை உருவானால் தான் சமூக விரோதிகள் காவலர்களையும் அரசையும் கண்டு அஞ்சும் சூழ்நிலை ஏற்படும் என்பதை உணர்ந்து அத்தகைய சூழ்நிலையை நான் பொறுப்பேற்ற உடனேயே கொண்டு வந்துள்ளேன் என்பதை இங்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுதல், குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளுக்கு தண்டனைப் பெற்றுத் தருதல், குற்றங்கள் நிகழாமல் தடுத்தல், ஆகிய பணிகளை செவ்வனே செயல்படுத்த வேண்டுமெனில் தேவையான அளவு காவலர்களின் எண்ணிக்கை இருத்தல் அவசியமாகும். இந்தப் பணிகளை செய்ய வேண்டிய காவலர்கள் அதிகாரபூர்வமற்ற முறையில், அதாவது, unofficial ஆக வேறு பணிகளுக்கு அனுப்பப்பட்டால் சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுவதை காவல் துறை எவ்வாறு செம்மையாக செய்ய இயலும்? முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதியின் குடும்பத்தினர் வெளியே செல்லும் போதெல்லாம் பாதுகாப்பிற்காக காவலர்கள் சென்று கொண்டிருந்தால் அதிகாரபூர்வமாக அந்த காவல்துறை அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலையை யார் செய்வார்கள்? முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதியின் பரந்து

விரிந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள், மனைவி, துணைவி, மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள் என ஏறக்குறைய **135** பேர் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் அதிகாரப்பூர்வமற்ற முறையில் unofficialஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். **135** குடும்பத்தினருக்கும் பாதுகாப்பிற்கு காவலர்கள் சென்று விட்டால் சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டவும், குற்றங்களை கண்டுபிடிக்கவும் காவலர்கள் எங்கிருந்து வருவார்கள்? அதே போல, மத்திய அமைச்சர் திரு. அழகிரி வீட்டில் unofficial ஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். அவருக்கு நெருக்கமானவர்களுக்கும் அதாவது அவருடனேயே சுற்றித் திரியும் சில சமூக விரோதிகளுக்கும் unofficial ஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். மேலும், பல வணிக நிறுவனங்களிலும் தவறான முறையில் பாதுகாப்புப் பணியில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

மேலும், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணி என்ற போர்வையில், சென்னை மாநகரத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களிலும்; மதுரை மாநகரில், அரசியல் பிரமுகர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும், செல்வாக்குடைய தனிப்பட்டோரின் சொந்த நலன் கருதி காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சென்னை போக்குவரத்து காவல்துறை காவலர்கள் அதிகாலை **4** மணி முதல் இரவு **11** மணி வரை, சில முக்கியப் பிரமுகர்களின் போக்குவரத்து ஒழுங்குப் பணி என்ற போர்வையில் ஐந்திற்கும் மேற்பட்ட இடங்களிலும் அவற்றிற்கு இடையேயான வழித் தடங்களிலும் கடந்த **5** ஆண்டுகளாக பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அக்காவலர்கள் திரும்ப அழைக்கப்பட்டு சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு சீரான

போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் போக்குவரத்துப் பணிகளில் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடுவோர்; நில ஆக்கிரமிப்பு செய்வோர்; கள்ள லாட்டரி சீட்டு விற்பனையாளர்கள்; ரேஷன் பொருட்கள் கடத்துவோர்; மணல் கொள்ளையர்கள் போன்றோர் எந்தவித பயமுமின்றி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்தார்கள் என்பதை தமிழக மக்கள் அனைவரும் நன்கு அறிவர். சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது எவ்வித பாகுபாடும் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் கண்கூடாக பார்த்திருப்பீர்கள். இந்த மாமன்றத்தில் பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்களும் ஒரு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டி இதை தெரிவித்துள்ளனர்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், காவலர் முதல் காவல் துறை உயரதிகாரிகள் வரை எங்கு நியமிக்கப்பட வேண்டும் என்பது திரு கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்கள், அன்றைய ஆளும் கட்சியினர், உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோரின் உத்தரவின் பேரில் முடிவு செய்யப்பட்டதால் காவல் துறையினர் மீதான உயரதிகாரிகளின் கட்டுப்பாடும், அரசின் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. உள்ளூர் அரசியல் பிரமுகர்களின் கட்டளைக்கிணங்க காவல் துறை நடக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இவையெல்லாம் தற்போது நீக்கப்பட்டு விட்டன என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள்.

சமூக விரோதிகள் சிலர் அரசியல் ஆதரவுடன் கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபட்டு நிலம் மற்றும் சொத்துப் பிரச்சனைகளில் தலையிட்டு பொதுமக்களிடமிருந்து பணத்தை அபகரித்து வந்தனர். தனது சொத்தை ஒருவர் விற்க நினைத்தால் அந்த சொத்தை செல்வாக்கு உள்ள ஒரு சிலரின் அனுமதியின்றி ஒருவர் வாங்க இயலாத நிலை கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்தது. அந்தச் சொத்துக்களை செல்வாக்கு மிக்க நபர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையையும் மக்கள் நன்கு அறிவார்கள். அவ்வாறு கட்டாயமாக பிடுங்கப்பட்ட சொத்துக்களை மீட்பதற்குத் தான் தனிச் சட்டம் கொண்டு வரப்படும் என்று ஆளுநர் உரையிலேயே தெரிவித்துள்ளோம். அந்தச் சட்டம் வெகு விரையில் இயற்றப்படும் என்ற உறுதியினை நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

கடந்த ஆட்சியில் நீராதாரம் பாதிக்கும் வகையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி இயந்திரங்கள் மூலம் வரம்பின்றி மணல் அள்ளப்பட்டு பிற மாநிலங்களுக்கு கடத்தப்பட்டதை யாரும் தட்டிக் கேட்க இயலாத சூழ்நிலை நிலவியது. இவ்வாறு மணல் திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டதன் அடிப்படையில் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு வார காலத்திற்குள்ளாகவே மணல் கொள்ளையில் ஈடுபட்ட 897 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மீது 810 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மேலும், மணல் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 112 லாரிகள், 74 டிராக்டர்கள், 4 தானியங்கி பளுதூக்கும் லாரிகள், 2 தானியங்கி பாரமேற்றும் இயந்திரங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

காவல் துறையினர் எவ்விதப் பாகுபாடும் இன்றி சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுவதிலும், குற்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதிலும், குற்ற நிகழ்வுகள் நடைபெற்ற இடத்தில் குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தரவும் முழு மூச்சுடன் செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

காவல் துறையினர் இழந்த பழம் பெருமை விரைவில் மீட்கப்படும் என்பதையும், தமிழகம் விரைவில் முழு அமைதிப் பூங்காவாக மாறும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தில் நிலவும் மின் பற்றாக்குறை சூழ்நிலை பற்றி கருத்து தெரிவித்தார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தின் மின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து, மக்களுக்கு எவ்வளவு நேரம் மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத ஒரு நிலைக்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டனர்.

சென்னை மாநகரில் ஒரு மணி நேரம், மாநிலத்தின் இதரப் பகுதிகளில், மூன்று மணி நேரம் மின் தடை என முந்தைய தி.மு.க. அரசு அறிவித்தது. ஆனால், உண்மையில், அதற்கு மேலும் அறிவிக்கப்படாத மின் தடையாக மேலும் 2, 3 மணி நேரம் எல்லா பகுதிகளிலும் மின் தடை இருந்தது என்பதை தமிழக மக்கள் அனைவரும் அறிவர். மேலும், தொழிற்சாலைகளுக்கு 20 சதவீதம் மின் வெட்டும் மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான உச்ச மின் தேவை காலத்தில் 90 சதவீதம் மின் வெட்டும்

அமல்படுத்தப்பட்டது. தேவைக்கேற்ப மின் திட்டங்களை ஏற்படுத்தாததும், நிருவாக சீர்கேடுகளும் தான் இவ்வாறு மின் வெட்டு ஏற்பட முக்கியக் காரணம் ஆகும். கடந்த ஐந்தாண்டு முழுமையும், இவற்றை எல்லாம் மறைத்து, முந்தைய எனது ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் தீட்டப்படாதது தான் மின் வெட்டுக்குக் காரணம் என உண்மைக்கு மாறான செய்தியை முந்தைய தி.மு.க. அரசு பரப்பி வந்தது.

ஆனால், உண்மை நிலை என்னவென்றால், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், வடசென்னை அருகில், வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.07.2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதே போன்று, தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.06.2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த இரு மின் திட்டங்களுக்கு தேவையான நிலங்கள் ஒதுக்கீடு பெறவும், பல்வேறு அனுமதிகளைப் பெற ஆய்வுகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டம், வைகை படுகையில் உள்ள இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி வழுதூரில், 95 மெகாவாட் திறன் கொண்ட புதிய எரிவாயு சுழலி மின் நிலையத்தை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டது. 29.9.2004 அன்று இந்த மின் நிலையத்திற்கு தேவையான எரிவாயுவை வழங்குவதற்கு இந்திய எரிவாயு ஆணையத்தோடு ஒப்பந்தமும் கையெழுத்தானது. மார்ச் 2006இல், இதற்குண்டான

ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்து ஒப்பந்தமும் வழங்கும் இறுதி நிலையில் இருந்தது.

வட சென்னை அனல் மின் நிலையத்தில் போதுமான நிலம் இருந்ததால் அங்கு 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ 12.12.2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைத்திடுவதற்கான கருத்துரு அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் முதற்கட்ட பணிகளான காடுகளின் நில அளவை போன்ற பணிகளை 8.9.2005 அன்று முதல் துவக்கியது.

எனது அரசு மேற்கொண்ட முயற்சிகளை அதற்குப் பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, தொடர்ந்திருந்தால் தற்போது மாநிலத்தில் நிலவும் மின் தட்டுப்பாட்டை சுலபமாக தவிர்த்திருக்க முடியும்.

குறைந்த செலவில் அதிக மின் உற்பத்தி ஏற்படுத்த பல மாநிலங்களில் 4000 மெகாவாட் திறனுடைய பிரம்மாண்ட மின் திட்டங்களை அதாவது, Ultra Mega Power Project-களை நிறுவுவதற்கு 2006இல் இந்திய அரசு ஒரு கொள்கையை அறிவித்தது. தமிழ்நாட்டிலும், 2 பிரம்மாண்ட மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவ அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இத்திட்டங்கள் அமைவதற்கான இடங்களைத் தெரிவு செய்ய முந்தைய தி.மு.க. அரசு காலதாமதம் செய்ததால் இத்திட்டங்கள் இன்னமும் தொடங்கப் பெறாமல் உள்ளன. இந்திய அரசின் தொடர் வலியுறுத்தலின் காரணமாக 31.3.2008 அன்று, அதாவது, கிட்டத்தட்ட ஒன்றரை வருட கால தாமதத்திற்குப் பிறகு செய்யூரில் பிரமாண்ட மின் திட்டத்தை நிறுவ தமிழ்நாடு அரசு, அதாவது,

தி.மு.க. அரசு ஒப்புதல் அளித்தது. அப்பொழுதும், தமிழ் நாடு அரசால் captive துறைமுகத்தை உறுதி செய்ய முடியாமல் அதன் பிறகு அக்டோபர் 2009இல் மட்டுமே முடிவெடுக்க முடிந்தது. எனவே, கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் இந்தக் காரணத்தால் வீணானது. இரண்டாவது இடத்திற்கு இந்திய அரசால் இன்னமும் ஒப்புதல் வழங்கப்படாமல் உள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை முந்தைய தி.மு.க. அரசு சரிவர நிர்வகிக்காததால் மின் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்தில், அதாவது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நம்முடைய அனல் மின் நிலையங்கள் முறையான பராமரிப்பினாலும், தகுந்த கண்காணிப்பினாலும் மிக நன்றாக செயல்பட்டு, மத்திய எரிசக்தி துறையினுடைய சிறந்த உற்பத்தித் திறனுக்கான தேசிய விருதுகளைப் பெற்றன. ஆனால், 2006 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில், அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில், எந்த விதமான விருதையும் இந்த அனல் மின் நிலையங்கள் பெறவில்லை.

6,000 மெகாவாட்டிற்கும் அதிகமான காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தில் உள்ளன. ஆனால், அந்த மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான மின் தொடரமைப்பு வசதி இல்லாததால், காற்றாலைகள் மூலம் பெறப்படும் மின்சாரத்தை முழுமையாகப் பெற இயலவில்லை. தேவையான மின்தொடர் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு விரைவில் ஏற்படுத்தும்.

பழுதடைந்த நிலையில் உள்ள மின் நிலையங்களை உடனே சரி செய்ய போர்க்கால அடிப்படையில் எனது அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஜனவரி 2010 முதல்

பழுதடைந்த நிலையில் இருந்த வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம், நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்னர் இந்த ஜுன் மாதம் மீண்டும் இயக்கி வைக்கப்பட்டது. இதே போன்று, ஓராண்டு காலமாக பழுதடைந்த நிலையில் இருந்த குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையமும் இந்த மாதம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த இரண்டு மின் திட்டங்களும் ஓராண்டு காலமாக பழுதடைந்த நிலையில் இருந்தும், அவற்றை சரி செய்ய தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டே வார காலத்திற்குள் இவற்றை சரி செய்து, இவை இரண்டும் இன்று பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

முந்தைய தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கடலூர் பவர் கம்பெனி என்கின்ற நிறுவனத்துடன் 1,320 மெகாவாட் அனல் மின் திட்டத்தை நிறுவ 28.09.2006 அன்று மின் கொள்முதல் ஒப்பந்தம் கையெழுத்திட்டது. இத்திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தி முழுமையாக தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

திறமையற்ற நிர்வாக முடிவுகளினாலும், நிலக்கரி விநியோகிக்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு அற்ற செயல்களாலும் நிலக்கரி இடப் பெயர்வு மேலாண்மை பாதிக்கப்பட்டது. இதனால், பல நேரங்களில் நிலக்கரி தட்டுப்பாட்டின் காரணமாக, தூத்துக்குடி, மேட்டூர், வட சென்னை மற்றும் எண்ணூர், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டது.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2,518 மெகாவாட் மின் நிறுவு திறன் கூடுதலாக நிறுவப்பட்டது. ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சியில் வெறும் 206 மெகாவாட் மட்டுமே நிறுவு திறன் அதிகரிக்கப்பட்டது. இதே போன்று, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2,595 மெகாவாட் கூடுதல் மின் திட்டங்கள் நிறுவுவதற்கு வழிவகை செய்யப்பட்டது.

முந்தைய தி.மு.க. அரசு மின் தட்டுப்பாட்டை போக்குவதற்காக வியாபாரிகளிடமிருந்தும், மின் சந்தையிலிருந்தும், மின் திருப்புதல் முறையிலும், மின் கொள்முதல் செய்து வந்தது. இதில் மின் கொள்முதலுக்காக சராசரியாக, யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 பைசா வரை செலவிடப்பட்டது. ஆனால், இந்திய மின்சார சட்டம், 2003ன்படி, நீண்ட கால கொள்முதல் முறையான Case-1 bidding மூலம் மின் கொள்முதல் கொள்கை நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் ஏற்கெனவே மின் கொள்முதல் செய்த விலையில் பாதி விலைக்கே மின் கொள்முதல் செய்திருக்க முடியும்.

தற்போது மாநிலத்தில் நிலவும் மின் பற்றாக்குறை நிலையை மாற்றி அமைக்க குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்களின் அடிப்படையில் எனது அரசு பல்வேறு முயற்சிகளை எடுக்கும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பழுதடைந்த மின் நிலையங்கள் உடனடியாக சீரமைக்கப்பட்டுள்ளன. குறுகிய கால மற்றும் நீண்ட கால மின் கொள்முதல் முறையை இணைத்து லாபகரமான மற்றும் நிலையான மின் கொள்முதல் கொள்கையை எனது அரசு கடைபிடிக்கும். அடுத்த ஐந்தாண்டுகளில், மின் வாரியத்தின் நிறுவு திறன் மேலும் 10,000 மெகா வாட்டிற்கும் அதிகமாக அதிகரிக்க, நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போது, எனது அரசு எடுத்துள்ள

நடவடிக்கைகளின் காரணமாக அறிவிக்கப்படாத மின் வெட்டுகள் நிறுத்தப்பட்டு விட்டன. மேலும், வரும் ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டு 2 மணி நேரமாகக் குறைக்கப்படும். படிப்படியாக, மின் வெட்டே இல்லா மாநிலமாக தமிழகம் விரைவில் மாறும் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2001 முதல் 2006 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில், 2006-ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாகத் தான் இருந்தது. இன்னும் அதிகமான மின் நிறுவுத் திறனுடன் அதைவிட சுபிட்சமான நிலையை இந்த ஆட்சிக் காலத்தில் அடைவோம் என்று உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தைப் பற்றி சில உண்மைகளை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழக சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத் துறைகள் அனைத்தும் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்தே செயல்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டதன் அடிப்படையில் 14–ஆவது சட்டமன்றம் தற்போது புனித ஜார்ஜ் கோட்டையில் செயல்பட்டு வருகின்றது. சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய கட்டடத்திலிருந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டதற்கு ஒரு சிலர் விமர்சனம் செய்து வருகின்றனர். சட்டமன்றமும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்கு மாற்றப்பட்ட ஒரு சில துறைகளும் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள கட்டடத்திற்கு மாற்றி உத்தரவிடப்பட்டது ஏன் என்பதை 20.5.2011 அன்றே ஒரு அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளேன். எனினும், ஒரு சில அரசியல் கட்சியினர்

சட்டமன்றமும் தலைமைச் செயலகமும் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்க வேண்டும் எனவும் அந்தப் புதிய கட்டடம் முந்தைய தி.மு.க. அரசால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால் தான் நான் அதனை மாற்றுவதற்கு உத்தரவிட்டதாக தவறான கருத்தினை தெரிவித்துள்ளனர். அரசு நிருவாகத்தில் நான் என்றுமே அரசியலை புகுத்தியதில்லை என்பதை நடுநிலையாளர் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

தலைமைச் செயலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுவதை நான் ஒரு போதும் எதிர்த்தது இல்லை. ஆனால் தற்போது கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடத்திலிருந்து பணியாற்றுவதால் நிருவாக குறைபாடு எதுவும் ஏற்படாது என்றால் நான் அங்கிருந்தே பணியாற்றி இருப்பேன். அவ்வாறு இயலாது என்பதால் தான் அங்கிருந்து பணியாற்றுவது நிருவாகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால் தான் சட்டமன்றம் மற்றும் அங்கு மாற்றப்பட்ட ஒரு சில துறைகளை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

4.7.2007 அன்று பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்ட Üóê£¬íJ™ (G.O.Ms.No.209) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில், 8 இலட்சம் சதுர அடியில், சட்டமன்றம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்கள், தலைமைச் செயலாளர் அலுவலகம் மற்றும் பொதுத் துறை, உள்துறை மற்றும் நிதித்துறை முதலிய முக்கிய துறைகளுக்காக 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எந்த ஒரு அறிவார்ந்த அரசாவது சட்டமன்றம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம், ஏனைய அமைச்சர் அலுவலகங்கள்

மற்றும் 2, 3 துறைகளுக்கு மட்டும் ஒரு புதிய கட்டடத்தை அதுவும் 2 கிலோ மீட்டர் தொலைவில் கட்டுமா? 200 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்ட இந்த பிளாக் A கட்டடத்திற்கு இன்றைக்கு 600 கோடி ரூபாய்க்கு மேலான செலவுக்கு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

பிளாக் A கட்டடத்தின் மொத்த உட்பரப்பு 97,829 சதுர மீட்டர்கள் ஆகும். அதில், அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தக் கூடியது 47,491 சதுர மீட்டர்கள் தான். அதாவது, 49 சதவீதத்திற்கும் குறைவான கட்டட உட்பரப்பையே உபயோகப்படுத்த இயலும். ஏனைய கட்டடப் பரப்பு எல்லாம் சுற்றுப் பாதை, நடைக் கூடம், வாஸ்து மீன் தொட்டி போன்ற அலுவலக உபயோகங்கள் அல்லாத வேறு உபயோகங்களுக்கான இடங்கள் தான். அந்தக் கட்டடத்தின் வடிவமைப்பு வணிகக் கட்டடங்களைப் போன்று அமைக்கப்பட்டுள்ளதால் தான், அலுவலகத்திற்காக பயன்படுத்தக் கூடிய இடம் 49 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், 624 கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தை செலவு செய்து கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தில் பாதிக்கு மேல் பயன்படுத்த முடியாத வெற்றிடமாக உள்ளது. மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

பிளாக் A கட்டுவதற்கு உத்தரவு வழங்கி ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு 21.5.2009இல் அரசாணை எண்.81-இல் ஏனைய அரசுத் துறைகளுக்காக பிளாக் B கட்டடத்தைக் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. ஒரு சில அரசுத் துறைகள் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்கள், சட்டமன்றம் மட்டும் ஒரு இடத்திலும், ஏனைய அரசுத் துறைகள் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேறு ஒரு இடத்திலும் செயல்பட வேண்டும் என்று அறிவார்ந்த எந்த அரசும் முடிவு செய்ய இயலுமா? அரசு

நிருவாகத்தைப் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல் கட்டடம் கட்டப்பட ஆணையிடப்பட்டதால் தான் பெரும் நிருவாக சிக்கல் ஏற்பட காரணமாயிற்று.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள பிளாக் A கட்டடத்தில் கட்டடப் பணிகள் முழுமையாக முடிவடையாமலேயே 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் திறப்பு விழா நடத்தப்பட்டது. அந்தக் கட்டடத்தின் மேற்கூரை கோபுரம் கட்டி முடிக்கப்படாமலேயே தற்காலிக செட்டிங் போட்டு 3 கோடி ரூபாய்க்கு மேல் வீணடிக்கப்பட்டது. கட்டடத் துவக்க விழா நடத்தப்பட்டு விட்டதால் முழுமையடையாத கட்டடத்தில் இருந்து 19.3.2010 அன்று சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற வேண்டியதாயிற்று. அவ்வாறு 19.3.2010 அன்று சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற்ற போது சட்டமன்றத் தரையில் புதிய தரை விரிப்பு தான் போடப்பட்டிருந்தது. காலரிகள் உள்ள முதல் மாடி முடிக்கப்படாததால் பெரிய திரைச்சீலை ஒன்றினால் சுவர்கள் மறைக்கப்பட்டும், தற்காலிக இருக்கைகள் அமைக்கப்பட்டும் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றப் பேரவைத் தலைவர் இருக்கையும் கூட தற்காலிகமாக உயர்த்தப்பட்ட மேடையில் நிறுவப்பட்டது.

திறப்பு விழா நடைபெற்றும் பணிகள் முடிக்கப்படவில்லை என்று மக்கள் குறை கூறிய காரணத்தால் ஒரு சில துறைகள் மட்டும் அவசர கோலத்தில் 2010 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டன.

தான் சிந்திக்காமல் கட்டடம் கட்ட எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப முதலமைச்சர் அலுவலகம், அமைச்சர்களின் அலுவலகங்கள் மற்றும் 6 துறைகளை மட்டும் புதிய கட்டடத்திற்கு மாற்றிவிட்டார்

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. தலைமைச் செயலகம் இவ்வாறு 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இரண்டு கட்டடங்களிலிருந்து செயல்பட இயலுமா? அரசு நிருவாகத்தைப் பற்றி, தெரிந்த எவரும் இவ்வாறு 2 கட்டடங்களிலிருந்து செயல்பட வேண்டும் என்று கூற மாட்டார்கள். தலைமைச் செயலகத்தில் கோப்புகளில் எவ்வாறு உத்தரவுகள் இடப்படும் என்று அறிந்த எவரும் இவ்வாறு இரண்டு வெவ்வேறு கட்டடங்களிலிருந்து செயல்படுங்கள் என்று கூற மாட்டார்கள். உதாரணமாக, பள்ளிக் கல்வித் துறையிலிருந்து ஏதேனும் ஒரு உத்தரவு வேண்டி கோப்பு முதலமைச்சர் வரை சுற்றனுப்பப்படுகிறது என்றால், அந்தக் கோப்பு எவ்வாறு பயணிக்கும் என்பதை இப்போது பார்ப்போம். சுற்றோட்டக் குறிப்பு அதாவது Circulation Note தயாரித்து பள்ளிக் கல்வித் துறைச் செயலர் கையெழுத்திட்ட பின் அந்தக் கோப்பு தலைமைச் செயலர் கையெழுத்திடுவதற்காக ஓமந்துாரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கட்டடத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தலைமைச் செயலர் கையெழுத்திட்ட பின் அந்தக் கோப்பு மீண்டும் துறைச் செயலருக்கு புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து, அதன் பின்னர் அமைச்சரின் கையெழுத்திற்காக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கட்டடத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பெறப்பட்டு முதலமைச்சர் ஆணைக்காக புதிய கட்டடத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு ஆணை பெறப்பட்ட பின் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள துறைக்கு மீண்டும் அனுப்பப்பட்டு அரசாணை வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொரு கோப்பும் இவ்வாறு பல முறை ஒரு கட்டடத்திலிருந்து இன்னொரு கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வந்தால் நிருவாகம் நடத்த இயலுமா?

அதேபோல, துறை அமைச்சர் தனது துறைச் செயலாளருடன் ஏதாவது விவாதிக்க வேண்டும் என்று கருதினால் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தனது அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். அவ்வாறு விவாதிக்கும் போது ஏதேனும் ஒரு கோப்பை அமைச்சர் பார்வையிட வேண்டும் என்று எண்ணினால், அவர் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து அந்தக் கோப்பை எடுத்துக் கொண்டு ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்கு மீண்டும் செல்ல வேண்டும். இது நடைமுறையிலே சாத்தியமா? அரசு நிருவாகத்தைப் பற்றி கவலையே படாதவர்கள் இரண்டு வெவ்வேறு இடங்களில் மாத்திரமென்ன பல இடங்களில் இருந்தும் செயல்பட முடியும். ஆனால், அரசு நிருவாகம் திறமையாக செயல்படவேண்டும் என்று நினைப்பவர் யாரும் இவ்வாறு இரண்டு வெவ்வேறு கட்டடங்களிலிருந்து செயல்பட முடியாது. செம்மையான நிருவாகம் இருந்தால் தான் மக்கள் பணியை சிறப்பாக செய்ய முடியும் என்பதால் தான், புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட ஆறு துறைகளையும் எஞ்சிய 30 துறைகள் செயல்பட்டு கொண்டிருக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நான் மாற்றியுள்ளேன். நிருவாக வசதிக்காக எடுக்கப்பட்ட இந்த முடிவில் அரசியல் காரணம் எங்கிருந்து வந்தது?

மேலும், போக்குவரத்து நெரிசல் மிகுந்த சென்னையின் மத்தியப் பகுதியில் உள்ள அண்ணா சாலையில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால் மேம்பாலங்கள் கட்டப்பட்டால் தான் அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கலாம் என்பதை முந்தைய அரசே உணர்ந்திருந்தது. எனவே தான், அங்கே மேம்பாலங்கள் கட்டப்படும் என 2010-11 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும்,

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அறிவிப்புகளிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மேம்பாலங்கள் கட்டப்படவில்லை. சாலை மேம்பாலம் துவங்கப்படாத நிலையில் ஓமந்தூரார் அரசினர் தோட்ட கட்டடப் பகுதியிலுள்ள அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவே இயலாது.

இவ்வாறு, முழுமையடையாத, நிருவாகத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய கட்டடத்திலிருந்து எவ்வாறு செயல்பட முடியும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்.

புதிய பிளாக் A கட்டடம் பயன்படுத்தப்படாமல் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுவிடும் என்று தி.மு.க.வினர் அங்கலாய்க்கத் தேவையில்லை. இந்தக் கட்டடம் உரிய முறையில் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத் தான் நான் முதலமைச்சராக பதவியேற்று கொண்ட அன்றே மக்கள் பயன் பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன். மக்களுக்கு உணவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால் தான் எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். மிக அதிகமாக இலவசங்கள் வழங்குவோம் என்று கூறி மக்களிடமிருந்து ஓட்டுக்களை பறித்துக் கொள்ளும் திட்டமாக இதை நான் கருதவில்லை. இலவச அரிசி என்பது

மக்களுக்கு உண்மையிலேயே உணவு பாதுகாப்பை அளிக்கக் கூடிய திட்டம். எனவே தான் முதல் நாளிலேயே அதற்கான உத்தரவை பிறப்பித்தேன்.

அதை போன்று தான் அன்று பிறப்பித்த ஏனைய உத்தரவுகளும். மகளிருக்கு வழங்கும் திருமண உதவித் திட்டத்துடன் தாலிக்கான 4 கிராம் தங்கம்; இளங்கலைப் பட்டம், பட்டயம் படித்த மகளிருக்கு 50,000/- ரூபாய் மற்றும் தாலிக்கான 4 கிராம் தங்கம் வழங்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தேன். இது திருமணத்திற்காக இலவசமாக வழங்கும் பரிசு அல்ல. இதில் ஒரு பெரும் பொருள் புதைந்து இருக்கிறது. பாரதி கண்ட கனவான 'ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை' என்ற நிலை ஏற்பட வேண்டும் என்றால் பெண் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். எனவே தான் இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையை இரட்டிப்பாக்கி 50,000/- ரூபாய் என உத்தரவிட்டேன். உலக பொருளாதார காரணங்களினால் தங்கத்தின் விலை விண்ணை எட்டும் அளவு ஏறிக் கொண்டிருக்கும் நேரத்தில் திருமண உதவியாக தங்கம் வழங்க வேண்டும் என்பதால் தான் தேர்தல் அறிக்கையிலேயே அதைக் குறிப்பிட்டு அதற்கான உத்தரவையும் பிறப்பித்தேன்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவித் தொகைகளுக்கு எல்லாம் குறை கண்டு பிடிக்க வேண்டும் என்றே தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் தங்களது திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவ்வளவு தான் என்று பொத்தாம் பொதுவாக கூறியுள்ளனர்.

மேலும் முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி தனது கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பல இலவச திட்டங்களை தங்கள் காலத்திலேயே ஏற்படுத்திய போது மக்களின்

வாழ்க்கையையே பாழாக்குகிறார்கள் என்றும்; மக்களை முன்னேற விடாமல் சோம்பேறி ஆக்குகிறார்கள் என்றும்; சில எதிர்க்கட்சியினரும் ஏடுகள் நடத்தும் சிலரும் கண்டனம் தெரிவித்தார்கள் என்று கூறி தற்போது இலவச அரிசித் திட்டத்தை பத்திரிகைகள் பாராட்டுவதற்கு தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். மக்கள் வறுமையில் இருந்து விடுபடும் வரை வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக தேவையானவை வழங்கப்படுவதும்; இலவசம் என வழங்கப்படுவதும் வேறு வேறு ஆகும். மனித வளம் மேம்பட மனிதர்கள் தங்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பெற அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை நாங்கள் என்றுமே எதிர்த்தது கிடையாது. வாழ்க்கைத் தரம் முன்னேற வழங்கப்படும் சலுகைகளுக்கும் இலவசங்களுக்கும் உள்ள வித்தியாசம் ஒரு சிறிய எல்லை தான். எந்த எல்லைக்குள் இருப்பது மனிதவள மேம்பாட்டிற்கு ஏற்றது என்பதும்; எந்த எல்லைக் கோட்டை தாண்டுவது மக்களை ஏமாற்ற வழங்கப்படும் இலவசம் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறு மக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக வழங்கப்படும் இலவசங்களைத் தான் நாங்கள் எதிர்த்து வந்தோம். இலவசமாக வழங்குகிறோம் என்று இறுமாப்புடன் சொல்வது; மக்கள் நலத் திட்டங்களை ஏதோ தானமாகக் கொடுப்பதாக நினைத்துக் கொள்வது ஆகியவை தான் தவறு.

ஏழைகளுக்கு வழங்கப்பட்டவைகளை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு இலவசம் என்று கொச்சைப்படுத்தியது. ஏழைகள் உள்ளவரை இலவசங்கள் தொடரும் என்று இறுமாப்புடன் கூறினார் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி. இலவசங்களை வழங்கி மக்களை ஏமாற்றி விடலாம் என்று தி.மு.க. கருதியதால் தான் இலவசங்களைப் பெற்ற மக்கள் நன்றியுடன் தங்களுக்கு

வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் நலத் திட்டங்களை வாக்குகள் பெறப் பயன்படும் கருவியாக பார்த்தார்கள். மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் வரிப் பணத்தாலேயே வழங்கப்படுபவை என்பதை மறந்து அதை மறைத்து மக்களுக்கு ஏதோ தானம் வழங்குவதைப் போல தி.மு.க.வினர் பேசினார்கள்.

இலவசங்களை மக்களுக்கு பயன்படுபவையாகக் கருதாமல் தங்கள் சொந்த நலனையே முந்தைய தி.மு.க. அரசு கருதியது என்பதற்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கும் திட்டமே சிறந்த உதாரணமாகும். 2006 ஆம் ஆண்டு தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் மகளிர் பொது அறிவு வளர்வதற்காக தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று தெரிவித்து விட்டு, பின்னர் அரசாணை வெளியிடப்படும் போது வண்ணத் தொலைக்காட்சி பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு 14 inch வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும் என அரசாணை வெளியிடப்பட்டது. அதன் பின்னர், வாய்மொழியாக குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்களுக்கு வழங்கப்பட்டதாக முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சொல்லும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை சுமார் 1 கோடியே 64 இலட்சமாகும். 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி உள்ள குடும்பங்களின் (Household) எண்ணிக்கை 1 கோடியே 42 இலட்சமாகும். அதில் கிட்டதட்ட 56 இலட்சம் குடும்பங்கள் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருந்தார்கள். இதில் எவ்வளவு பேரிடம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை என்ற புள்ளி விவரம் மக்கள்தொகை கணக்கெடுப்பில் இல்லை. எனினும்,

50 சதவீதம் பேர் தான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருந்தார்கள் என்று எடுத்துக் கொண்டாலும் 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பின்னர் புதியதாக ஏற்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக்கொண்டாலும் 1 கோடியே 64 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்குத் தான் வழங்கப்பட்டிருக்குமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் யார் என்ற முழுமையான கணக்கையே முந்தைய தி.மு.க. அரசு எடுக்கவில்லை. எந்த ஒரு அரசுத் திட்டமானாலும், எந்த ஒரு கோரிக்கையானாலும், தனக்கு என்ன தேவை என்பதை அதைக் கோருபவர் கையொப்பமிட்டு விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்பது தான் அரசின் நடைமுறை. ஆனால், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தில் எந்த விண்ணப்பமும் பெறப்படவில்லை. முந்தைய தி.மு.க. அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழு (Committee) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் என தயாரித்த பட்டியலின் அடிப்படையிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. எனவே தான், சொந்தமாக கார் வைத்திருப்பவர்கள் கூட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்க தங்கள் காரிலேயே வந்து அதனை வாங்கிச் சென்றதையெல்லாம் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

இவ்வாறு வழங்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டித் திட்டம் மக்களுக்கு பயன் தரக் கூடிய திட்டமா? அல்லது ஆட்சியாளர்களுக்கு பயன்படக் கூடிய திட்டமா? என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களும், தமிழக மக்களும் தீர்மானிக்கட்டும்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கான கேபிள் இணைப்பிற்கு மக்கள் கட்டணம் செலுத்த வேண்டும். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்திற்காக ஐந்தாம் கட்டம் வரை முந்தைய தி.மு.க. அரசு ஒதுக்கீடு செய்த தொகை, 3,687 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஆகும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒவ்வொன்றும் பல்வேறு கட்டங்களில் 2,061 ரூபாயில் இருந்து 2,965 ரூபாய் வரை வாங்கப்பட்டு உள்ளது. அதாவது, சராசரியாக ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு 2,265 ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. இந்தப் பணம் மக்கள் வரிப் பணத்தில் இருந்து வழங்கப்பட்டது தான். அவ்வாறு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொண்ட மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக கேபிள் கட்டணம் செலுத்த வேண்டும். கேபிள் இணைப்புத் தொழிலில் கோலோச்சிக் கொண்டிருப்பவர்கள் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் பேரன்கள் திரு. கலாநிதி மாறனும், திரு. தயாநிதி மாறனும், திரு. துரை தயாநிதியும் தான். 2,265 ரூபாய் மதிப்புள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொண்ட பொதுமக்கள் திரு. கருணாநிதியின் குடும்பத்திற்கு கேபிள் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4,000 கோடி ரூபாய் செலுத்தி வருகின்றனர். அதாவது, மக்கள் வரிப் பணத்தில் இருந்து, கவனிக்க வேண்டும், 3,687 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவழித்து விட்டு, ஆண்டு தோறும் தனது குடும்பத்திற்கு 4,000 கோடி ரூபாய் வருமானத்திற்கு வழி செய்து விட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. திரு. கருணாநிதியின் குடும்பத்திற்கு ஓராண்டிற்கு 4,000 கோடி ரூபாய் கேபிள் கட்டணமாக கிடைக்கிறது என்றால் 5 ஆண்டு காலத்திற்கு 20,000 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என்று

தான் கணக்கிட வேண்டும். எனவே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் மக்கள் நலனைக் கருதாமல் சொந்த நலனுக்காக தி.மு.க. ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் தான் என நான் ஆணித்தரமாக கூறுகிறேன்.

எனவே தான், கடந்த ஜனவரி மாதம் முந்தைய தி.மு.க. அரசால் ஆறாம் கட்டமாக கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்ட 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இதுவரை கொள்முதல் செய்யப்படாத சுமார் 7 இலட்சத்து 48 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதலுக்கான உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், அதாவது, 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இதுவரை கொள்முதல் செய்யப்படாத சுமார் 7 இலட்சத்து 48 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதலுக்கான உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும்; ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு இன்னமும் வழங்கப்படாத 1 இலட்சத்து 27 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, அனாதை இல்லங்கள், அரசு பள்ளிகள், ஊராட்சிகள், அரசு மருத்துவமனைகள், சுகாதார துணை மையங்கள், அங்கன்வாடி மையங்கள் போன்ற அமைப்புகளுக்கு வழங்க இந்த அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! முந்தைய தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட எல்லா இலவசத் திட்டங்களுமே இது போன்ற ஊழல் மலிந்த திட்டங்கள் தான். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல இலவச

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை மட்டும் இங்கே சொல்லி அத்துடன் நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ஊரக வீட்டு வசதித் திட்டம் பற்றி சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் கைவிடப்படுவதைப் பற்றி இங்கே சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுவந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளைக் கொண்டது. அத்திட்டத்தில் வழங்கப்படும் மானியமான 75 ஆயிரம் ரூபாயில் ஏழை எளிய குடும்பங்கள் வீடு கட்ட இயலாத நிலையிலேயே இருந்தனர். கட்டுமானச் செலவு இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்து விட்ட நிலையில், ஏழைக் குடும்பங்கள் கடன் வாங்கித் தான் வீடு கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கடன் சுமை இல்லாத வகையில் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும் என்பதால், சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இந்த திட்டத்தின் படி, சுமார் 300 சதுர அடி அளவில் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் அரசே வீடு கட்டி கொடுக்கும். அதைப் போலவே, நகர்ப்புற ஏழைகளின் வீட்டு வசதிக்காக ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய, தரமான மருத்துவச் சேவையை வழங்குவதே இந்த அரசின் குறிக்கோளாகும். முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அனைவருக்கும் பயன்படக் கூடிய வகையில் அமையப் பெறவில்லை. அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ஒரு இலட்ச ரூபாய் ஆகும். குடும்பத்திலுள்ள

ஒரு நபர் இந்தத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள முழு காப்பீட்டுத் தொகையையும் பயன்படுத்திவிட்டால், அவரோ அல்லது அவரது மற்ற குடும்ப உறுப்பினர்களோ திட்டம் அமலில் உள்ள நான்கு ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின் மூலம் எந்தப் பயனையும் பெற இயலாது. மேலும், அனுமதிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையான ஒரு இலட்ச ரூபாய், சில உயிர் காக்கும் பெரிய அறுவை சிகிச்சைகளுக்குப் போதுமானதாக இல்லை. இந்தத் திட்டத்தில் மருத்துவப் பரிசோதனைகளுக்கான கட்டணங்களை வழங்கவும் வழி இல்லை. Scan போன்ற அதிக செலவு ஏற்படும் பரிசோதனைகளுக்குக் கூட இந்தத் திட்டத்தில் கட்டணங்கள் வழங்க இயலாது. இதனால் ஏழை நோயாளிகள் மருத்துவ பரிசோதனைகளுக்காக கடன் வாங்கித் தான் செலவழிக்கும் நிலை உள்ளது. மேலும், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற அறுவை சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் பிந்தைய பாதுகாப்பு மற்றும் தொடர் மருத்துவ சிகிச்சை வழங்க இந்தத் திட்டத்தில் வழிவகை இல்லை.

காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நோயாளிகள் அறுவை சிகிச்சை மேற்கொண்டாலும், அதில் சேர்க்கப்படாத இனங்களுக்கான கட்டணங்களை தனியார் மருத்துவமனைகள் பயனாளிகளிடம் இருந்தே பெற்றன. சில தனியார் மருத்துவமனைகள் நோயாளிகளிடம் பணம் வசூல் செய்தல் போன்ற முறைகேடுகளிலும் ஈடுபட்டன. அரசு மருத்துவமனைகளில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட வேண்டும் எனினும் இது வரை வழங்கப்பட்ட மொத்த காப்பீட்டுத் தொகையான 850 கோடி ரூபாயில், அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட தொகை வெறும் 10 கோடியே 49 இலட்ச ரூபாய் தான். அதாவது, 1.2 சதவீதத்

தொகையே அரசு மருத்துவமனைகளுக்குச் சென்றுள்ளது. மொத்தத்தில், இந்த காப்பீட்டுத் திட்டம், தனியார் மருத்துவமனைகள் அதிகம் வளர்ச்சி அடையவே பயன்பட்டது. எனவே தான், இந்தத் திட்டத்தை கைவிட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக் கூடிய வகையில், ஒரு புதிய பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி அனைவரும் தங்களுக்குத் தேவையான மருத்துவ வசதி பெறுவதை உறுதி செய்யும்.

அடுத்து சமச்சீர் கல்வி பற்றி அரசின் கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். சமச்சீர் பள்ளிக் கல்வி முறையினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே எதிர்த்ததில்லை. 2010 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை சட்ட முன் வடிவு, 2010 குறித்து இப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் போது கொள்கை அளவிலே சமச்சீர் கல்வி முறையை ஏற்றுக் கொள்வதாகத் தான் தெரிவித்தோம். சமச்சீர் கல்விக்கு இந்த அரசு எதிராக இருப்பது போல சிலர் தவறாக சித்தரிக்க முயல்வது மக்களை திசை திருப்பும் முயற்சி தான். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சீரான, செம்மையான கல்வி பெற வேண்டும் என்பதும், தனியார் பள்ளிகளிலே வழங்கப்படும் உயர்தர கல்வி ஏனைய பிரிவினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதும் தான் எங்கள் கொள்கை.

மாணவர்களின் எதிர்காலத்திற்கு பயன்படக் கூடிய சீரான, செம்மையான கல்விமுறை பாடத்திட்டத்தை வழங்காமல் பெயர் அளவிலே சமச்சீர் கல்வி என்று வழங்குவது தமிழ்நாட்டு

மாணவர்களை பல ஆண்டுகள் பின் நோக்கி இழுத்துச் சென்று விடும் என்பதால் தான், தமிழ்நாட்டு சிறுவர், சிறுமியர் மேலுள்ள அன்பினாலும், அக்கறையினாலும் தான் நாங்கள் முந்தைய அரசால் கொண்டு வரப்பட்ட பாடப்புத்தகங்கள் பயன்படுத்தப்படக் கூடாது என்று அதனை மாற்ற முடிவு செய்தோம்.

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தன்னுடைய கவிதை இருப்பதால் இந்த பாடத்திட்டத்தையே நாங்கள் எதிர்க்கிறோம் என்றும், வேண்டும் என்றால் அந்தக் கவிதையை எடுத்துவிட்டு சமச்சீர் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு கூறி இருப்பதன் மூலம் ஏதோ ஒரு சில பாடங்கள் இருப்பதால் தான் இந்த அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தையே மாற்றி அமைக்கிறது என்று கூறி மக்களை திசை திருப்ப பார்க்கின்றார்.

சமச்சீர் கல்வித் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை முந்தைய அரசால் நியமிக்கப்பட்ட டாக்டர் முத்துக்குமரன் குழு தெளிவாக எடுத்துரைத்துள்ளது. சமச்சீர் கல்வி என்பது, பல்வேறு வகை கல்வி முறைகளில் காணப்படும் குறைகள் களையப் பெற்று நிறைகளை அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே சீராக வழங்குவது என்று அந்த அறிக்கையின் முன்னுரையிலேயே டாக்டர் முத்துக்குமரன் குழு குறிப்பிட்டுள்ளது. ஆனால், தற்போது முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டதாக கருதப்படும் சமச்சீர் கல்வி என்பது அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதற்குப் பதிலாக அனைவருக்கும் ஒரே பாட புத்தகங்கள் என்ற நிலையிலேயே நின்று விடுகிறது. இங்குள்ள பள்ளி சிறுவர், சிறுமியர் அறிவு வளர்ச்சி அடையவும், சிந்தனை மேம்படவும், ஏனையரோடு போட்டி போடும் தகுதியை வளர்த்துக் கொள்ளவும் தரம் வாய்ந்த கல்வி அறிவு

பெறுவதே சமச்சீர் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு இல்லாமல், அனைவருக்கும் ஒரே பாடபுத்தகம் என்ற அளவிலேயே முந்தைய அரசின் சமச்சீர் கல்விக் கொள்கை நின்று போய் விட்டது தான் பெரும் தவறு.

சமச்சீர் கல்வி வெறும் ஒரே பாடபுத்தகத்தால் ஏற்படுத்தப்படுவது அல்ல. சமமான தரம் உருவாக்குவதும் செயற்படுத்துவதும், பாடத் திட்டம் மட்டுமல்லாது பள்ளி வசதிகள், ஆசிரியர் எண்ணிக்கை, அவர்தம் திறமை, பாடநூல்கள் தேர்வு முறைகள், பள்ளி நிர்வாகம், பள்ளிக் கல்வி நிர்வாகம், ஆகிய பள்ளிக் கல்வியின் அங்கங்கள், அவற்றின் தொடர்பாக யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெரும் திட்டம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், கலைத் திட்டம், நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் மாணவர் விகிதம், இவற்றுள் ஏதாவது ஒன்று மட்டுமே சமமாக இருந்தால் மட்டும் சமச்சீர்க் கல்வியை உருவாக்க முடியாது என டாக்டர் முத்துக்குமரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை பல்வேறு சட்டங்கள் சில ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன என்று டாக்டர் முத்துக்குமரன் அறிக்கை தெரிவித்து, ‘‘முரண்பாடுகளை சரி செய்தும், தொகுத்தும், ஒரே சட்டமாக சட்டமன்றத்தில் இயற்றப்படுவதே தமிழக கல்வியின் வளர்ச்சிக்கும் உறுதித் தன்மைக்கும் உதவும். எனவே, அனைத்து பள்ளிகளுக்கும் பொருந்தும் ஒரு பொதுச் சட்டமாக தமிழ்நாடு கல்விச் சட்டம் என்ற தலைப்பில் ஒரு சட்டம் இயற்ற பரிந்துரைக்கப்படுகிறது’’ எனக் குறிப்பிட்டு, அச்சட்டத்தில், பள்ளிகள் தொடங்குதல், ஆசிரியர் தகுதி, உள்கட்டமைப்பு வசதி, பள்ளிக் குழுக்கள், கலைத் திட்டம், தேர்வுகள், மாணவர் ஒழுக்க

விதிகள், ஆசிரியர்கள் நடத்தை விதிகள், நெறிகள், போன்ற பல அம்சங்களும் இடம் பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய ஒரு comprehensive விரிவான சட்டம் இயற்றப்பட்டால் தான் சமச்சீர் கல்வி மூலம் சிறப்பான கல்வியை அனைவருக்கும் அளிக்க இயலும்.

சமச்சீர் கல்வி முறை வெற்றி பெற வேண்டும் எனில், டாக்டர் முத்துக்குமரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, சமச்சீர் கல்வி வாரியம் அமைக்கப்பட்டு அதன் கீழ், தேவைப்படும் கல்வி குழுமங்களும் அமைக்கப்பட்டு அவை உயிர்ப்புடன் செயல்பட தீவிர நடவடிக்கை எடுத்தால் தான் முடியும். ஒரே மாதிரி புத்தகத்தை மட்டும் வைத்துக் கொண்டு அது தான் சமச்சீர் கல்வி என்று கூறுவது எத்தகைய கேலிக்கூத்து என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் உணர வேண்டும்.

சமச்சீர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் முன் இத்திட்டம் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கும் வகையிலும் புதிய பாடத்திட்டத்தில் அமைந்த பாடங்களைக் கற்பிக்க வழிகாட்டும் வகையிலும் நூல்கள் எழுதி வெளியிடுவது இத்திட்டம் சிறப்பாக நிறைவேற மிக அவசியம்.

உயர்நீதிமன்றம் தனது உத்தரவில், பத்தி **61**–இல், ஆசிரியர்கள் தேர்வு முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

61. The ambitious effort undertaken on the part of the State to bring in social justice and to have quality education will all come to naught if the selection of teachers

is not made properly. The selection and appointment of teachers cannot be made just like selection and appointment of a clerk. A teacher must love teaching, she must love children. We come across horrible news items of physical violence committed by teachers on children. If the teacher imparts joy and inculcates confidence in the child, the child will willingly go to school. Therefore, definitely the State will have to look at amendments to the rules relating to recruitment of teachers if it seriously intends this Act to transform the lives of children across the State, whether they are poor, disabled, living in tribal areas, whether they are girl children, or children from downtrodden sections of society, or any child who does not have certain potential plus points whom the State wants to uplift and in order to attain a quality of excellence. We hope therefore the State will address its attention in this regard also. Recently we read in the newspapers the findings of an NGO after a survey of schools in the country that our State has a very high percentage of student enrolment but the quality of teachers is low. This may be challenged as inaccurate but we insist that the State shall take steps to ensure that the teachers are of a high quality.

உயர்நீதி மன்றத்தின் இந்த அறிவுரை பற்றி முந்தைய தி.மு.க. அரசு கவலைப்படவே இல்லை. ஆசிரியர் தேர்வு பற்றி சரியான முடிவு எடுக்கப்படாமல் தரமான கல்வி வழங்குவது என்பது இயலாத காரியம் ஆகும்.

இந்த சட்டத்தின் மூலம் தற்போது நிறைவேற்றப்படும் சமச்சீர் கல்வி ஒரே விதமான பாட புத்தகங்கள் கொண்டு வருவதோடு நின்று விடுகிறது என்பதால் தான், இதை அவசர கோலத்தில் நடைமுறைப்படுத்த முடியாது என நாங்கள் கருதுகிறோம். இவ்வாறு அரை குறையாக நிறைவேற்றப்படும் சமச்சீர் கல்வி, சமமான கல்வியாகவும் இருக்காது! சீரான கல்வியாகவும் இருக்காது! என்பதால் தான் சமச்சீர் கல்வித் திட்டம் நிறைவேற்றப்படுவதை நாங்கள் தள்ளி வைத்து, அதற்காக ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நமது மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலம் அமையப் பெற அதற்கான கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று தீர்மானித்து, சமச்சீர் கல்வித் திட்டத்திற்கான நடைமுறைகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைக்க உள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சில புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

**அறிவிப்பு – 1**

ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகளை பதனிடுவதை முக்கியப் பணியாக இந்த ஆலை கொண்டுள்ளது. ஒரு மாதத்தில் சுமார் 18 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது இந்த ஆலை. ஆலையிலிருந்து வெளியேற்றப்பட்ட சாயக்கழிவு நீரால் ஏற்பட்ட மாசுக்கு அபராதத் தொகை செலுத்த வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்

அபராதத் தொகையான, **1** கோடியே **11** இலட்சத்து **46** ஆயிரத்து **363**-ஐ செலுத்தத் தவறியதால் **15.12.2010**-இல் ஆலையை மூடுவதற்கு அறிவிப்பு அனுப்பியது. அதனை ரத்து செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இதற்காக கண்காணிப்புக் குழு அமைத்து அதன் அறிவுரையின் பேரில் ஆலையைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உத்தரவின்படி, **23.2.2011** முதல் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை மூடப்பட்டது.

உயர்நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழு, மார்ச் மாதம் ஆலையை ஆய்வு செய்து தெரிவித்த அறிவுரைகளை ஆலை நடைமுறைப்படுத்தியது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மீதமுள்ள அபராதத் தொகையான **1** கோடியே **11** இலட்சத்து **46** ஆயிரத்து **363** ரூபாயை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்பதுடன், மேலும் சில நிபந்தனைகளை விதித்தது.

மூடப்பட்டுள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையை திறப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டதன் அடிப்படையில், அபராதத் தொகை முழுவதும் **30.5.2011**-இல் செலுத்தப்பட்டுவிட்டது. நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் முறையான ஆய்வுக்குப் பிறகு **1.6.2011**–இல் இந்த ஆலையை திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆலையை இன்று Video Conferencing முறை மூலம் நான் திறந்து வைக்க உள்ளேன்.

கடந்த ஆட்சியில் மூடப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையை இன்று திறப்பதன் மூலம் **300**

தொழிலாளர்களும், அவர் தம் குடும்பத்தினரும் வாழ்வு பெறுவர். மேலும், பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச சீருடையை உரிய காலத்தில் வழங்கவும் இயலும்.

**அறிவிப்பு – 2**

தீ விபத்தினால் முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு இரண்டாயிரம் ரூபாயும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ஆயிரம் ரூபாயும் தற்போது நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படும் போது முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு ஐந்தாயிரம் ரூபாயும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயும் நிவாரண உதவித் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதே அடிப்படையில், தீ விபத்துகளினால் முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு ஐந்தாயிரம் ரூபாயும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இது உடனடியாக அமல்படுத்தப்படும்.

**அறிவிப்பு – 3**

ஒவ்வொரு கிராமத்திலும் நில உரிமையாளர்களை காட்டும் பதிவேடுகள் சரியானதாகவும், தற்போது உள்ள நிலையைக் குறிப்பிடுவதாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு உண்மையான உரிமையாளர்கள் மற்றும் உண்மையான அனுபவதாரர்களின் பெயர்கள் நில உரிமை பதிவேட்டில் பதியப் பெற்றிருந்தால் தான் நில உரிமைதாரர்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட இயலும். தற்போதுள்ள விதிமுறைகளின்படியும், மக்கள்

சாசனம் – அதாவது – Citizen Charter-ன்படியும், பட்டா மாறுதலுக்கான விண்ணப்பத்தினை வட்டாட்சியர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும். நிலங்கள் உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்யப்பட வேண்டிய இனங்களில் 30 நாட்களிலும்; உட்பிரிவு செய்யப்பட தேவையற்ற இனங்களில் 15 நாட்களிலும் பதிவு மாறுதல் செய்யப்பட வேண்டும். ஆனால், தற்போது பல்வேறு காரணங்களினால் மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது.

பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எனவே, பட்டா மாறுதலுக்கான விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம் கொண்டு வரப்படும். பட்டா மாறுதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொது மக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாத வகையில் அவ்வாறான மனுக்களை கிராம நிர்வாக அலுவலரிடம் VAO-விடம் சமர்ப்பிக்க வழிவகை செய்யப்படும். வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோர் ஒரு குழுவாக செயல்பட்டு, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள். பட்டா மாறுதலுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் கணினியில் பதியப்பட்டு அதிகாரிகள் அளவில் நில நிர்வாக ஆணையர் மட்டத்திலும், வருவாய் துறை அமைச்சர் அளவிலும் ஆய்வு செய்யப்படும். வருவாய் நிலை ஆணையில், அதாவது Revenue Standing Order-இல், தக்க மாறுதல் செய்யப்பட்டு இது நடைமுறைப்படுத்தப்படும்.

இதைப் போன்றே, முதியோர் உதவித் தொகை உட்பட அரசின் மாதாந்திர ஓய்வூதிய திட்டங்களுக்கான விண்ணப்பங்களும் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், அடங்கிய குழுவால் சரிபார்க்கப்பட்டு ஓய்வூதிய ஆணைகள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சுதந்திரம் அடைந்து விட்டதாகத் தமிழக மக்கள் அனைவருமே உணர்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக மக்களுடைய அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும் பறிக்கப்பட்டிருந்தன. கடந்த 5 ஆண்டு காலமாக பத்திரிகைகளும், ஊடகங்களும்கூட இந்த அடக்குமுறையை அனுபவித்தன. உண்மையான விவரங்கள்கூட வெளியிடுவதற்கு அனுமதி வழங்காத ஒரு நிலைமை இருந்தது. உண்மையை வெளியிட பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும் அனுமதி தேவையில்லை. அதுதான் ஜனநாயகம்; ஆனால், அப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை சூழ்நிலை நிலவியது. உதாரணத்திற்கு ஒருசிலவற்றை இங்கே நினைவுகூற விரும்புகிறேன்.

இதே சட்டமன்றப் பேரவையில் கடந்த 5 ஆண்டு காலத்தில் ஒரு முறை நான் இங்கே பேசியபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளைக் குறிப்பிட்டேன். ‘‘என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! இருட்டினில் நீதி மறையட்டுமே! தன்னாலே வெளிவரும் தயங்காதே! ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!’’ என்று நான் சொல்லிவிட்டு, அதன் பிறகு நான் வெளியேறி விட்டேன். நான் சென்ற பிறகு, அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, இந்தப் பாடலைக் குறிப்பிட்டு, ‘‘ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!’’ என்று

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடியது தன்னைத்தான் – அதாவது, திரு. கருணாநிதியைத் தான் என்று குறிப்பிட்டு – அவர் என்னைச் சொல்லவில்லை – ஏனென்றால், ஒரு தலைவி இருக்கிறாள் என்று சொல்லவில்லை; ஒரு தலைவன் இருக்கிறான் என்று தான் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஜெயலலிதாவை அவர் குறிப்பிடவில்லை என்று அவர் சொன்னார். நான் வெளியே சென்ற பிறகு தான் இதைக் கேள்விப்பட்டேன். அதற்கு நான் பதிலளித்து ஒரு அறிக்கை வெளியிட்டேன். புரட்சித் தலைவர் என்னைப் பார்த்து, ''திருவளர்செல்வியோ, நான் தேடிய தலைவியோ!'' என்று பாடியிருக்கிறார். ஆகவே, அதில் என்னைத் தான் குறிப்பிடுகிறார். அவருடைய அரசியல் வாரிசு நான் தான் என்பதை அனைவருக்கும் அடையாளம் காட்டியிருக்கிறார் என்று நான் பதிலடி கொடுத்தேன்.

ஆனால், இது திரு. கருணாநிதிக்குப் பிடிக்கவில்லை. இப்படி புத்திசாலித்தனமாகச் சொன்னதற்கு உடனடியாக ஜெயலலிதா பதிலடி கொடுத்து விட்டாரே என்று அனைத்துப் பத்திரிகைகளையும் மிரட்டி, இந்தச் செய்தியை வெளியிடக் கூடாது என்று கட்டாயப்படுத்தி, என்னுடைய அறிக்கை எந்தப் பத்திரிகையிலும் வெளியிடப்படவில்லை என்பது தான் உண்மை. ஆக, இந்த அளவிற்கு அற்பத்தனமான காரியங்களில், அற்பத்தனமான சிந்தனையில் அந்தக் காலக்கட்டத்தில் முதலமைச்சரே செயல்பட்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன்.

கடந்த ஆண்டு நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, வரிசையாக பல பிரம்மாண்டமான பொதுக் கூட்டங்களை நான் நடத்தினேன். கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரம்மாண்டமானப் பொதுக்கூட்டம் திரண்டு விட்டது. அனைத்துப் பத்திரிகைகளும் அந்தக் கூட்டத்தைப்

பற்றிப் பிரமாதமாகச் செய்திகளை வெளியிட்டன. உண்மையைச் சொன்னார்கள். 8 இலட்சம் பேருக்கு மேல், 9 இலட்சம் பேருக்கும் மேல் அங்கே கூடிவிட்டார்கள் என்ற உண்மையைச் சொன்னதால், திரு. கருணாநிதிக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது.

அடுத்து ஒன்றரை மாத காலத்திற்குள் திருச்சியிலே ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடத்தினேன். கோவையில் திரண்ட கூட்டத்தைவிட மூன்று மடங்கு அதிக கூட்டம் அங்கே திரண்டது. கோவையிலே ஒரு ஏழு இலட்சம் பேர் திரண்டார்கள் என்றால், திருச்சியிலே 21 இலட்சத்திற்குமேல் கூட்டம் கூடிவிட்டது என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால், அன்றைய காலக்கட்டத்தில் திரு. கருணாநிதி அனைத்து பத்திரிக்கைகளையும் மிரட்டி, கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மிரட்டியதால், ஒரு பத்திரிகைகூட திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தைப்பற்றி செய்தியே வெளியிடவில்லை. ஒருசில பத்திரிகைகளில் ஜெயலலிதா திருச்சிக்கு சென்றார், பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார், சென்னை திரும்பினார் என்று மட்டும் போட்டார்களே தவிர, சில பத்திரிகைகளில் செய்தியே வெளியிடவில்லை. எந்த பத்திரிகையிலும் உண்மையை வெளியிடவில்லை. இங்கே பிரமாண்டமான மக்கள் கூட்டம், மகத்தான மக்கள் கூட்டம் கூடியது என்ற செய்தியை வெளியிடவில்லை. அதையே இருட்டடிப்பு செய்துவிட்டார்கள். ஆகவே அந்த அளவிற்கு ஒரு பயம், ஒரு அச்ச உணர்வு, ஒரு அடக்குமுறை இருந்தது. பத்திரிகைகள் ஏன் பயப்படவேண்டும்? பத்திரிகை முதலாளிகள் முதலமைச்சரைக் கண்டு ஏன் பயப்படவேண்டும் என்று கேட்டால் அது அவர்களுக்குத்தான் தெரியும். என்ன காரணம் என்று அவர்களுக்குத்தான் தெரியும். அப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை அப்போது நிலவியது.

அதுமட்டுமல்ல, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரை, எனக்கு சாதகமான, கழகத்திற்குச் சாதகமான எந்தச் செய்தியும் வெளியிடக்கூடாது என்று பத்திரிகைகளுக்கு ஒரு Standing Order போடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, சட்டமன்றத்திற்கு நான் எப்போது வந்தாலும், என்னை பேசவிடாமல், முதலமைச்சரும் சரி, அத்தனை தி.மு.க. அமைச்சர்களும் சரி, அடிக்கடி எழுந்து குறுக்கிடுவது மட்டுமல்ல, அவமானப்படுத்தி, கொச்சைப்படுத்தி, அசிங்கப்படுத்தி பேசினார்கள்.

அதுமட்டுமல்ல அன்றைய சபாநாயகர் திரு. ஆவுடையப்பன் அவர்கள், நான் ஆரம்பத்தில் சட்டமன்றத்திற்கு வந்தபோது, அவருக்கு வணக்கம் தெரிவித்தபோது, மரபுபடி பதில் வணக்கம் தெரிவித்தார். அதுகூட அன்றைய முதல்வருக்குப் பொறுக்கவில்லை. தனியாக அழைத்து திரு. ஆவுடையப்பன் அவர்களை வாங்கு, வாங்கு என்று வாங்கிவிட்டார் போலும். அதன்பிறகு நான் சட்டமன்றத்திற்கு வந்து வணக்கம் தெரிவித்தால்கூட, பதில் வணக்கம் கூட தெரிவிக்காமல் சபாநாகயர் முகத்தை திருப்பிக்கொள்வார். இப்படி ஒரு சூழ்நிலையை, ஒரு ஜனநாயக நாட்டில், தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்த சட்டமன்றத்திலாவது கேள்விப்பட்டிருக்கிறோமா?

இன்றைய தினம் நீங்கள் எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுகிறீர்கள், கண்ணியத்துடன் பழகுகிறீர்கள். ஆனால் அன்றைய நிலைமை என்ன? அதை நீங்களே கண்கூடாகப் பார்த்திருக்கிறீர்கள். இதையெல்லாம் இன்றைக்கு எதற்காகச் சொல்கிறேன் என்றால், அனைவரும் வெறுப்படையக்கூடிய ஒரு சூழ்நிலைதான் கடந்த ஐந்து ஆண்டுகாலமாக இங்கு தமிழகத்தில் நிலவியது. சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன். அனைவரையும்

சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேன். நான் ஒரு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், எனக்கே இந்த நிலைமை என்றால், சாமான்ய மக்களின் நிலை என்ன? அதனால் தான் மக்கள் இந்தக் கொடுங்கோல் குடும்ப ஆட்சி எப்போது ஒழியும்? இதற்கு எப்போது நாம் வழிசெய்யலாம்? என்று காத்திருந்தார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை, யாருக்கும் எந்தவிதமான சுதந்திரமும் இல்லை. மக்கள் வேறு எதை விரும்புகிறார்களோ இல்லையோ, எந்த நாட்டிலும் சரி, பொதுமக்கள் சுதந்திரத்தை விரும்புவார்கள். இந்தியா என்று மட்டுமல்ல எந்த நாட்டிலும் அதேதான். அதனால்தான் முசோலினி, ஹிட்லர், இடிஅமீன் போன்ற சர்வாதிகாரிகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குமேல் அவர்களுடைய நாட்டு மக்களாலேயே தூக்கியெறிப்பட்டார்கள். அதைப்போலவே, கொடுங்கோல் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி திரு. கருணாநிதியின் குடும்ப ஆட்சியை தமிழக மக்கள் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து தூக்கியெறிந்துவிட்டார்கள்.

இனி தமிழ்நாட்டில் அத்தகைய ஒரு நிலைமை எந்தக் காலத்திலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழக மக்களுக்கு நான் அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில் தெரிவித்தவாறு, தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். அதே நேரத்தில், மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதுடன் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அதாவது, inclusive growth அமையும் வண்ணம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

மனித வளம் மேம்பாடு அடையச் செய்யும் நடவடிக்கைகளை எனது அரசு முனைப்போடு செயல்படுத்தும். மனித வள மேம்பாட்டில் முழு முதல் நடவடிக்கையாக பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982-லேயே கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அப்போது சத்துணவுத் திட்டத்தின் உயர்மட்டக் குழு உறுப்பினராக இருந்தவள் நான். எனவே தான், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய வழியில் அவருடைய கொள்கைகளை கடைபிடித்து அரசின் கொள்கைகளை வகுத்து வருகிறோம். அந்த அடிப்படையிலே தான் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக பாட நூல்கள் வழங்கும் திட்டம், +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டம் ஆகிய முன்னோடித் திட்டங்களை நான் செயல்படுத்தினேன். அதே போல தான், இப்போது +1, +2 பயிலும் மாணவ, மாணவியருக்கும், கல்லூரி மாணவ, மாணவியருக்கும் இலவச மடிக் கணினி வழங்கப் போகிறோம். மனித வள மேம்பாட்டில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டுள்ளோம்.

தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை துறைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், முதன்மைத் துறையான விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் எங்கள் அரசு எப்போதும் முன்னுரிமை அளிக்கும். இந்த ஐந்தாண்டு திட்டக் காலத்தில் எதிர் மறையாக உள்ள வேளாண் வளர்ச்சியை சரி செய்து, விரைவான வளர்ச்சிப் பாதையில் வேளாண் துறையைக் கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

2005 ஆம் ஆண்டில் உழவர் பெருமக்களின் உன்னத வாழ்விற்காக அதாவது, கருவறை முதல் கல்லறை வரை பயன்படக் கூடிய வகையில் "தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினேன். அதற்குப் பின் வந்த தி.மு.க. அரசு, நான் தொடங்கிய அந்தத் திட்டத்தையே பெயர் மாற்றம் செய்து, விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம், 2006 என சட்டம் இயற்றி நல வாரியம் ஒன்றையும் அமைத்தது. இதன் மூலம் விவசாயிகளுக்கு முழுமையான நன்மை கிடைக்கப் பெறவில்லை. எனவே, விவசாயப் பெருமக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் முழுமையான பயன் அடையும் வகையில் பல புதிய அம்சங்களை உள்ளடக்கிய புதிய உழவர் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்துவோம்.

ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள், முந்தைய தி.மு.க. ஆட்சியால் ஏற்பட்ட நிருவாக சீர்கேடுகளை உடனடியாகக் களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், இல்லை எனில் மக்கள் கொந்தளிப்பார்கள் என்றும் கூட குறிப்பிட்டார்கள். இத்தகைய கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று வாரங்களுக்கு உள்ளாகவே பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்துள்ளது. சீரற்ற மின் விநியோகத்தை சீர் படுத்துதல்; விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை; சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுதல்; மணல் கொள்ளையைத் தடுத்தல்; மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் என பல உறுதியான நம்பிக்கைத் தரும் நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருவதை, அனைவரும் அறிவர். Breakneck speed என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதைப் போன்ற வேகத்தில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், எங்களிடம் வேகம் மட்டும் அல்ல,

விவேகமும் உண்டு. எனவே, முந்தைய தி.மு.க. ஆட்சியின் அவலங்களைக் கண்டு கொந்தளித்த மக்கள் தற்போது அமைதியாகவும், வளமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடனும் உள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நான்கு நாட்களாக மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களுக்கு, ஐயங்களுக்கு எனது பதிலுரையின் மூலம் நான் தெளிவான விளக்கங்களை அளித்துள்ளேன். என்னுடைய பதிலுரையின் மூலம் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மன நிறைவு அடைந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ் நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான், இந்த அரசினுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை, லட்சியத்தை, இலக்கினை அடைய இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் முழு ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் அளித்த விளக்கங்களை ஏற்றுக் கொண்டு, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு தீர்மானத்தை ஏக மனதாக, ஒரு மனதாக நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாக அனைவரையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★




மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுடன்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான
புதிய அமைச்சரவை (16.05.2011)